[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [1983 மார்ச் 3

இயக்கப் போராட்டம், சாதி ஒழிப்புப் போராட்டம், இந்தி எதிர்ப்பு போர்ராட்டம் ஆகிய போராட்டங்களிலும் கலந்து கொண்டவராவர். இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தமிழ்நாடு கிளையின் துணைத் தலைவராகவும், சட்டப் பேரவையின் முஸ்லீம் லீக் கட்சியின் தலைவராகவும் நல்ல முறையில் பணி யாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும் இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) முன்னாள் ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

1966ஆம் ஆண்டிலிருந்து 1971ஆம் ஆண்டுவரை தமிழக ஆளுநராக பணியாற்றிய சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள் 15–2–1983ஆம் தேதியன்று மறைந்ததைக் குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் அவரது மறை வால் வருந்தும் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக்கொள்கிறது. சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள் 1895ஆம் ஆண்டு பிறந்தார். லாகூர் அரசினர் கல்லூரியில் கல்வி பயின்றார். 1926ஆம் ஆண்டு முதல் 1956ஆம் ஆண்டுவரை பஞ்சாப் மாநிலச் சட்ட மன்றப் உறுப்பினராகவும், 1937ஆம் ஆண்டிலிருந்து 1942ஆம் ஆண்டு வரை பஞ்சாப் அமைச்சரவையில் உள் துறையில் பார்லி மெண்டரிச் செயலாளராகவும் பதவி வகித்துள்ளார். 'வெள்ளையனே வெளியேறு' போராட்டத்திலும் தீவிரமாக ஈடுபட்டார். கிழக்கு பஞ்சாப் அரசாங்கத்தில் 1949ஆம் ஆண்டு தொழில் அமைச்சராக இருந்தார். 1952ஆம் ஆண்டிலிருந்து 1956ஆம் ஆண்டு வரை பஞ்சாப் மாநிலத்தில் நிதி மற்றும் தொழில் அமைச்சராகவும் பதவி வகித்துள்ளார். 1–9–1965 முதல் 27–6–1966 வரை பஞ்சாப் மாநில ஆளுநராகப் பதவி வகித்தார். 1966ஆம் ஆண்டு முதல் 1971ஆம் ஆண்டு வரை தமிழக ஆளுநராகப் பதவி வகித்தார். அவர் இம்மாநிலத்தில் ஆளுநராக இருந்தபோது நல்ல முறையில் பணியாற்றினார். எளிய வாழ்க்கையாலும் உயர்ந்த உள்ளத்தாலும் நம் எல்லோரையும் கவர்ந்தனர். அவரது மறைவால் வருந்தும் குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த பரிவையும் இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறது.

தீர்மானத்தை நிறைவேற்றும் வகையிலும் இறந்த பெரியவர் களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்களை இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றதன் மூலம் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறைந்த முன்னாள் ஆளுநர் திரு உஜ்ஜல் சிங் அவர்களுக்கு மரியாதை தெரிவிக்கின்ற வகையில் பேரவை நிகழ்ச்சிகள் இப்போது ஒத்திவைக்கப்படுகின்றன. பேரவை மீண்டும் 10-30 மணிக்கு கூடும்.

பின்னர் பேரவை காலை 10-04 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

மீண்டும் பேரவை 10—30 மணிக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் கூடியது.

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் விடுதியில் தண்ணீர் தட்டுப்பாடு

திரு மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆன் எ. பாயின்ட் ஆப் ஆர்டர். சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் மிகவும் பேரவதிக்கு உட்பட்டிருக்கிறார்கள். ஹாஸ்டலில் தண்ணீர் வரவில்லை, போன் சரியாக வேலை செய்யவில்லை. எனவே நீங்கள் இதை சிறப்புக் கவனத்தின் மூலமாக—தண்ணீர் இல்லாமல் சில உறுப்பினர்கள் குளிக்காமல் கூட வந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஊர் பூராவும் இதே பிரச்னைதான்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : ஏற்பாடு பண்ணியாகிவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னொன்றையும் நான் இப்போதே சொல்லிவிடுகிறேன். இனிமேல் ஒவ்வொரு அறையிலும் ஒவ்வொரு உறுப்பினருக்குத்தான் தண்ணீர். அப்படி வைத்துக்கொண்டால் பரவாயில்லை. ஒரு அறையில் பத்து பேர்கள் குளிப்பது என்றால் இப்போதே கிணற்றில் தண்ணீர் இல்லை என்ற நிலை இருக்கிறது. எனவே உறுப்பினர்கள் தங்கள் நண்பர்கள் சென்னைக்கு வருவதை சிறிது நாட்கள் தள்ளிவைக்கச் சொல்லிவிட்டு உறுப்பினர்கள் மட்டும் அறையில் வந்து தங்கினால் நன்றாயிருக்கும்.